# *கருத்துநிலையும் அது கட்டமைத்த அடையாள அரசியலும்: இலங்கையின் இனமுரண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு வரலாற்றுநிலை ஆய்வு.*

# Ideology and the constructed Identity Politics: A Historical Research based on Ethnic Conflict

S.Sivaretnam

## Abstract

*Ideology plays a major role in executing any inherent intentions which is to be implemented. It is common in social politics and governance. Racism and religious sects have been unavoidable roots in establishing the identity in Sri Lanka political history. The terms Sinhala and Tamil have been two major ideologies which constructed the identity politics in Sri Lanka. There have been numerous researches have been carried out based on language, economy, migration, university entrance and the so forth. This research intends to analyze the political phenomenon based on ideology. As this is a descriptive research qualitative research design was employed. Data were collected from selective secondary sources and peripheral readings focusing on the specific topic. Based on the data, the intensified concepts were analyzed qualitatively engulfing the political experiences. The research has concluded discovering the real factors behind the identity politics in Sri Lanka throughout the years.*

**Key words**: Ideology, Identity politics, racism, Marxism.

## அறிமுகம்

இலங்கையின் இனப்பிரச்சினையை விளங்கிக் கொள்வதற்கு சிங்கள, தமிழ் இனக்குழுமங்கள் கட்டமைத்த கருத்து நிலையினை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். கருத்துநிலை தொடர்பாக பல்வேறுவகையான விளக்கங்கள் இருந்த போதும் இலங்கையின் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய விளக்கமாக பின்வரும் விளக்கங்களை நோக்கலாம்.

கருத்துநிலை என்றால் என்ன என்பது தொடர்பாக ஜேம்ஸ் கிளக்மான் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“சமூக ஊடாட்டம் வளர வளர மனிதர்கள் பொதுவான எண்ணக்கருத்துக்களையும் உலகம் பற்றியனவும் தமது சமூக வாழ்க்கை பற்றியனவும், தெய்வம், சொத்து, தர்மம், நீதி ஆகியன பற்றியனவுமான நோக்குகளை வளர்த்துக் கொள்கின்றார்கள். இவ்வாறாக இவை சமூகம், அரசியம், சட்டம், மதம், கலைத்துவம், தத்துவநோக்கு

ஆகியன பற்றிய கருத்துநிலைப்பட்ட எண்ணங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். இவையே "கருத்துநிலை" என்று பெரும்பாலும் குறிப்பிடப்படுகின்றது. மனிதர்கள் புற இயற்கையோடும் தம்முள் ஒருவருக்கொருவரிடையேயும் கொண்டுள்ள செயல்முனைப்புள்ள நடவடிக்கைகள் பயனாக இந்த நோக்குகளும் நோக்க முறைமைகளும் உருவாகின்றன." (சிவத்தம்பி.கா,2000: 57)

அல்தூஸர் கருத்துநிலைக்கு பின்வரும் மற்றுமொரு விளக்கத்தை முன்வைக்கின்றார்

"கருத்துநிலை என்பது வரலாற்று இருப்பும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுள் வகிபாகம் (role) கொண்டதுமான சித்திரிப்புக்களின் (படிமங்கள், ஐதீகங்கள், கருத்துக்கள், எண்ணக்கருக்கள்) ஒரு முறைமை. தங்களுடைய இருப்புக்களின் நிலைமைகள், நிபந்தனைகளின் தேவைக்கேற்ப மனிதர்கள் மாற்றப்படுவதற்கும் மாற்று உருவப்படுவதற்கும் மிக அத்தியாவசியமானது கருத்துநிலையாகும். இது வெகுசனச் சித்திரிப்புக்களின் ஒரு முறைமையாகும்" (மேற்கோள், சிவத்தம்பி.கா.(2000), பக். 57-58) மேற்படி அறிஞர்களின் கருத்துக்களை மேற்கோள் காட்டிய பேராசிரியர் கா.சிவத்தம்பி கருத்துநிலை தொடர்பான தனது விளக்கத்தினை பின்வருமாறு முன்வைக்கின்றார்.

"கருத்துநிலை என்பது பெறுமானங்கள், கருத்துக்களின் முறைமை ஆகும். அது ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுக்குள்ளே இருந்தே கிளம்ப முடியும். அது மனித சீவியத்தின் மாறுகின்ற சூழல் பற்றியும் சிரத்தை கொள்ளுமேல் அது புதிய பண்பாடு பற்றிய சிரத்தையைக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது. இவ்வாறு நோக்கும் போது கருத்துநிலை என்பது ஒரு பண்பாடு முழுவதினதும் கருத்தியல் கருத்துருவாக்கம் ஆகும். எந்த ஒரு கருத்துநிலையும் தன் பண்பாட்டை வெளிக்காட்டும். ஆனால் அதில் ஒரு வேறுபாடு உண்டு, அந்தக் குழுவினால் வற்புறுத்தப்பட்டு அதன் பிரதிநிதியாக எடுத்துக்கூறப்படும் பண்பாடும், கருத்துநிலையும் அக்குழுமத்திடையே நிலவும் பௌதீக, ஆன்மீக இருப்புக்களின் பல்வேறு வடிவங்களினது வெறும் கூட்டுத்தொகையல்ல. அது அந்தந்தக் குழுமத்தினுள்ளே மேலாண்மை வகிக்கும் சமூகக் குழுவினது சமூகவாழ்க்கையினது கருத்துநிலை அம்சமாகவே இருக்கும்." (சிவத்தம்பி.கா,2000: 58)

**மகாவம்சம் கட்டமைத்த கருத்துநிலை**

வரலாற்றில் சிங்கள தமிழ் இனங்களின் முரண்நிலைக்கான கருத்துநிலைக் கட்டமைப்பை 6ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மகாவம்சத்தில்த்தான் கண்டு கொள்ள முடிகின்றது. கி.பி. 4ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் தீபவம்சத்தில் எல்லாளன் ஒரு சத்திரியனாக காட்டப்பட மகாவம்சம் அவனை தமிழனாகச் சித்தரிக்கின்றது. அதிகாரத்துக்காக நடந்த ஒரு போரை தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான ஒரு போராகவும் தமிழ் சிங்கள இனக் கருத்தியலை தோற்றுவித்து வளர்த்தெடுத்த முதல் நூலாகவும் மகாவம்சம் விளங்குகின்றது.

மகாவம்சம் இனத்துக்கு கருத்தியல் தளம் கொடுத்தது. சிங்கத்தின் புதல்வர்களாக சிங்கள மக்களை நிலைநிறுத்தியதும் "இளவரசன் கைமுனுவை வயிற்றில் சுமக்கையில் அரசி விகாரமகாதேவிக்கு உண்டான மூன்று ஆசைகள் பற்றிய

கதையில் எதிரி இனங்காணப்பட்டுள்ளான் ‘‘எல்லாளனது தளபதியின் தலை கொய்த வாள் கழுவிய நீரை, அவன் தலையில் கால்மிதித்து நின்றபடி பருக அவள் ஆசைப்பட்டாள்…அதை அரசி அரசனிடம் தெரிவித்தாள். ஆரசன் நிமித்திகர்களிடம் வினவினான். நுமித்திகர்களோ ‘இளவரசன் தமிழரை வெல்லான்’ என்றனர்…’’(மகாவம்சம் பீடித்த மாந்தர், திராணி குணசேகர, மொழி- மணி வேலுப்பிள்ளை, காலச்சுவடு, இதழ் 161, மே 2013)

துட்டகைமுனு தொடர்பான ஒரு நிகழ்ச்சியை மகாவம்ச ஆசிரியர் பின்வருமாறு விபரிக்கின்றார். ‘‘கோபமும் துக்கமும் அடைந்த இளவரசன் கட்டிலில் கால்களை முடக்கிக் கொண்டு படுத்திருந்தபோது தாய் அவன் அவ்விதம் படுத்திருக்கும் காரணத்தைக் கேட்டாள். அதற்கு அவன் தனது கட்டிலை நாட்டிற்கு ஒப்பிட்டு, ‘‘அங்கே ஆற்றின் மறுகரையில் தமிழர் இருக்கின்றனர், இப்பகுதியில் கடல் இருக்கின்றது, எனவே எப்படி நான் என் உடலை நீட்டிப் படுக்க முடியும்’’ என்று பதிலளிக்கிறான். இந்நிகழ்ச்சியினூடாக தமிழ் மக்கள் அடக்குமறையாளர்கள் என்றும் அவர்களை அழித்தொழித்து விடுதலை பெறுவது சிங்கள மக்களின் கடமை என்கின்ற உபதேசமும் கொடுக்கப்படுகின்றது.

இந்தக் கருத்தியல் தளம் மெல்ல மெல்ல வளர்ச்சி பெற்று 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூஜாவலி எனும் நூல் தமிழர்களுக்கெதிரான ஒட்டுமொத்த கருத்தியல் தளத்தைக் கொண்டதாக இருப்பதைக் காணலாம். எல்லாளனைப் பற்றிய நல்ல விடயங்கள் எதுவுமே பூஜாவலியில் இல்லாததோடு அவன் ஓர் அநீதியான அரசனாகவும் பௌத்த மதத்தையும் அதன் நிறுவனங்களான மடங்களையும் விகாரைகளையும் அழித்தவனாக சித்தரிக்கப்படுகின்றான். ஒரு மில்லியன் முப்பத்திநான்காயிரம் தமிழரைக் கொன்றபின் துட்டகைமுனு முடி சூடியதாகவும் அரசனுக்குரிய பத்துக் குணாதிசயங்களுக்கும் ஏற்ப அவன் அரசாண்டதாகவும், இலங்கை பௌத்தர்களுக்கேயுரிய நாடென்றும் அவர்கள் ஆட்சியே நிலைபெறும் என்றும் பூஜாவலி கூறுகின்றது.

இந்நூலாசிரியர்கள், தமிழர்கள் சிங்களவர்களுக்கும் பௌத்த மதத்துக்கும் எதிரானவர்கள். அவர்கள் அழிக்கப்பட்டு சிங்கள பௌத்தம் இலங்கையில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையுடன் சிந்தித்து வரலாற்றுச் சம்பவங்களை மாற்றி, திரிவுபடுத்தி தமது சிங்களப் பௌத்த கருத்தியல் தளத்தினை கட்டமைத்து வெற்றி பெற்றுள்ளார்கள்.

**அடையாள அரசியலின் தமிழ்க் கருத்து நிலைத் தளம்**

அடையாள அரசியல் என்றால் என்ன என்பது பற்றி பேராசிரியர் ந.முத்துமோகன் அவர்கள் பின்வருமாறு விளக்கம் தருகிறார். ‘‘நம்மைப் பொறுத்தமட்டில் நவீன காலத்தில், காலனிய மற்றும் பின்னைக் காலனிய காலச்சூழலில் ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தோன்றி வளர்ந்துள்ள ஒரு வகை அரசியலை அடையாள அரசியல் என்கிறோம். இந்நாடுகளில், மேலை உலகில் தோன்றியது போன்று தனிமனிதர்களை, அவர்களின் சுதந்திரம், நலன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் அரசியலுக்குக் கொண்டுவரும் பூர்ஷ்வா சனநாயக அரசியல்

வலுப்படவில்லை. மார்க்சியர்கள் குறிப்பட்டபடி, இங்கு வர்க்கங்களை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர அரசியலும் ஒருமுகமாக வெற்றிபெறவில்லை. மேற்குறிப்பிட்ட இருவகை அரசியல்களைவிட அதிக செல்வாக்குக் கொண்டதாக சாதி, மதம், மொழி, வாழ்நிலம், இனம், ஆகியவற்றை பொதுப் பண்பாகக் கொண்ட அரசியலே விளங்கி வந்திருக்கிறது. இவ்வகை அரசியலையே அடையாள அரசியல் என்கிறோம்.'' (முத்துமோகன்.ந, 2011:28)

இலங்கையர்கள் ஜனநாயக அரசியலுக்கு வந்தவுடனயே இனத்துவ அரசியலைத்தான் கையிலெடுத்தார்களே தவிர ஜனநாயகத்தை அல்ல இது உடனடியாகத் திட்டமிட்ட ஒரு போக்கல்ல இலங்கையர்கள் யாவரிடமும் உள்ளூர இருந்த அடையாளம் குறித்த பிரஞ்ஞையின் வெளிப்பாடே இதுவாகும். இதனை நாம் இலங்கையின் வரலாற்றினூடாகக் கண்டு கொள்ளலாம்.

ஒரு சமூகம் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் தனது பெருமையினைப் பேசுவதற்கும் அந்தப் பெருமையுடன் வாழ்வதற்கும் அதன் வாழ்வுத் தொடர்ச்சிக்கும் அந்தச் சமூகம் கொண்டிருக்கின்ற கருத்துநிலைத் தளம் முக்கியமானதாகும். இந்தக் கருத்துநிலைத் தளம் வரலாற்று நிகழ்ச்சிச் சம்பவங்கள், தொன்மைச் சடங்குகள், படிமங்கள், ஐதிகங்கள், கருத்துக்கள், எண்ணக்கருத்துக்கள், வாய்மொழிக் கதைகள் என்பவற்றின் ஊடாக தனது தேவைக்கேற்ப அந்தச் சமூகம் உருவாக்கிக் கொள்கின்றது. இதனை வெகுசன மட்டத்தில் கொண்டு செல்வதற்கும் அவற்றை சமூகநிலைப்படுத்தி அந்தச் சமூக உறுப்பினர் ஒவ்வொருத்தர்களின் உணர்வுநிலைப் படுத்துவதற்கும் ஏற்புடமையாக்குவதற்கும் அச்சமூக நிறுவனங்களான குடும்பம், மதம், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள், அறிவுஜீவிகள், சமூகத் தலைவர்கள், ஊடகங்கள் என அனைத்தும் ஒருமித்துச் செயற்பட்டு இந்தக் கருத்து நிலைத்தளத்தை அந்தச் சமூகப் பண்பாட்டின் அடித்தளமாக ஆக்கிவிடுகின்றன.

தமிழர்களுக்கு எதிரான சிங்கள கருத்துநிலைத் தளம் என்பது எதேச்சையாக உருவாக்கப்பட்டது அல்ல காலத்துக்குக் காலம் ஏற்பட்ட தென்னிந்திய படையெடுப்புக்கள் ஆக்கிரமிப்புக்கள் என்பவையே இதற்குக் காரணமாகும். இதனால் இக் கருத்துநிலைத் தளம் சிங்களச் சமூகத்தின் வரலாற்று நிலைப்பட்ட இருப்புக்கும் அதன் தனித்துவத்திற்கும் முக்கியமானதாகின்றது. இருந்த போதிலும் காலனித்துவ காலம்வரை இது நிறுவனமயப்பட்டு ஒரு அரசியல் நடவடிக்கையாக உருவாகவில்லை 19ம் நூற்றாண்டின் இறுதியில்த்தான் காலனியத்துவத்துவத்தின் கருவிகளான கிறிஸ்த்தவத்துக்கும் ஆங்கில மொழிக்கும் எதிரான ஒரு நிறுவனமயப்பட்ட நடவடிக்கையாக இக்கருத்து நிலைத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அடையாள அரசியல் நடவடிக்கை மேற்கிளம்புவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்த வகையில் ஆறுமுகநாவலரே இதனை முதன்முதல் முன்னெடுத்தவராவார். ''1848 இல் கார்ல் மார்க்சும் ஏங்கெல்லுசும் கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்ட அதே ஆண்டில் ஆறுமுகநாவலர் (1822–1879) யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையைத் தொடங்கினார் என்பது நம்மைப் பொறுத்தமட்டில் ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும். தமிழ் அடையாள

வரலாற்றில் இச்சம்பவம் ஒரு முதல் புள்ளியாக அமைகிறது'' (முத்துமோகன்.ந, 2011:137)

இங்கு பேராசிரியர் ந.முத்துமோகன் குறிப்பிடுகின்ற **'தமிழ் அடையாள வரலாற்றில்'** எனும் விடயம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. அதாவது சிங்கள மக்களிடத்தில் சிங்கள பௌத்த கருத்துநிலைத் தளம் ஒன்று அடிப்படையாக இருக்கும் போது நாவலர் தமிழர்களுக்கான கருத்துநிலைத் தளமாக அவர்களின் வரலாற்று நிலைப்பட்ட இருப்புக்கும் தனித்துவத்திற்கும், ஒருமைப்பாட்டுக்குமான தமிழ் அடையாளத்தை முன்வைத்தாரா என்பதுவே அதுவாகும்.

ஆறுமுகநாவலர் காலனிய ஆட்சிக்கெதிரான ஒன்றாகவோ அல்லது நேரடியாக சிங்கள பௌத்தத்திற்கு எதிரான ஒன்றாகவோ சைவப் பிரகாச வித்தியாசாலையை ஆரம்பிக்கவில்லை. அவர் காலனித்தவ ஆட்சியை ஏற்றுக்கொண்டார். ஆனால் காலனித்துவத்தினூடு வந்த கிறிஸ்த்தவமும் ஆங்கிலக் கல்வியும் யாழ்ப்பாண அதிகாரச் சமூகப்படிநிலைக் கட்டமைப்பை குலைப்பதையோ அதில் சலனத்தை ஏற்படுத்தவதையோ அவர் விரும்பவில்லை. குறிப்பாக சாதிரீதியான ஏற்றத்தாழ்வுகள் குறைவதனையும் அதற்கூடாக யாழ் வெள்ளாளருடைய பிடி தளர்வதையும் அவர் விரும்பவில்லை. அவருடைய கல்விக் கொள்கையும் எல்லா மக்களுக்குமுரியதல்ல. இதனால் யாழ்ப்பாணச் சமூக அதிகாரப் படிநிலையினைக் கட்டிக்காக்கவும் பேணவும் வளர்த்தெடுக்கத் தக்கதுமான கருத்துநிலையை முன்வைக்கின்றார்.

அந்தவகையில் ஆறுமுகநாவலர் முன்வைத்த தமிழர்களுக்கான கருத்துநிலைத் தளமாக ''சைவமும் தமிழும்'' எனும் கருத்துநிலை முக்கியமானதாகும். இது பற்றி பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார், ''சைவத் தமிழ்க் கருத்து நிலை என்பது யாழ்ப்பாணத்தின் பிரதான மதமரபினையும் மொழிப் பண்பாட்டையும் இணைந்து நோக்குகின்ற ஓர் ''உலக நோக்காகும்'' இதன்படிக்குச் சைவமும் தமிழும் ஒன்றிலிருந்து மற்றது நீக்கப்பட முடியாததாய், ஒன்று மற்றதில்லாமல் பூரணத்துவம் அடைய முடியாததாய் இருக்கும். ஒரு மதப் பண்பாட்டு இணைவு நிலையாகும். இந்த நோக்கு சைவத்தினதும், தமிழினதும் முழுவரலாற்றையும் உள்ளடக்கியதாகும். இந்நோக்கின் உள்ளார்த்தங்கள் மிக ஆழமானவை.

இதன்படிக்கு தமிழ் மனிதன், அவன் மொழி, அதன் பண்பாடு ஆகியவற்றின் உருவாக்கத்தில் வேறு எந்த மதத்துக்கும் இடமில்லை எனும் எண்ணத்துணிவு முன்வைக்கப்படுகின்றது. சமணம், ஆசீவகம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்த்தவம் ஆகிய மதங்களின் தமிழ்சார் பங்களிப்புகளை இக்கருத்து நிலை முற்று முழுதாக மறுதலிக்கின்றது. (இந்த உட்கிடக்கையை ''பல்வேறு மதத்தினரின் தமிழ்த் தொண்டு'' எனப்பெறும் கருதுகோளிலே காணலாம். இதன்படிக்குச் சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம், ஆகியன தமிழுக்கு ஆற்றிய தொண்டு பற்றிப் பேசலாம். ''சைவம் தமிழுக்கு ஆற்றிய தொண்டு'' என்று பேசப்படுவதில்லை'' (சிவத்தம்பி.கா,2000:40) என அவர் குறிப்பிடுவதனை நாம் மிகக் கவனமாக நோக்குதல் வேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று கருத்து நிலைத்தளம் என்பது அந்தச் சமூகத்தின் தேவைக்கேற்ப அச்சமூகம் உருவாக்கிக் கொள்வதாகும். ஒரு சமூகத்தின் கருத்துநிலைத் தளத்தினை அச் சமூகம் உருவாக்கிக் கொள்வதாக கூறப்பட்டாலும் உண்மையில் இதில் அந்தச் சமூகத்தின் எல்லா சமூகமட்ட மக்களின் கருத்துக்களின் வெளிப்பாடல்ல. மேலே பேராசிரியர் கா.சிவத்தம்பி குறிப்பிடுவது போன்று ‘‘சைவத் தமிழ்க் கருத்து நிலை என்பது ‘‘யாழ்ப்பாணத்தின் பிரதான மதமரபினையும் மொழிப் பண்பாட்டையும் இணைந்து நோக்குகின்ற ஓர் ‘‘உலக நோக்கு’’ ஆகுமே தவிர அது ஈழத்து மக்களின் கருத்துநிலையல்ல ஆனால் ஈழத்துச் சமூகத்தின் மேலாண்மை பெற்ற குழுமத்தின் கருத்துநிலையாக அந்தக் கருத்துநிலை இருப்பதனால் அதனை அந்தச் சமூகம் தனது அதிகாரத்தினூடாக ஒட்டுமொத்தச் சமூகத்தினதும் கருத்துநிலையாகக் கட்டமைத்துவிட்டிருக்கின்றது.

இந்தக் கருத்துநிலை சைவத்திலும் ஆகமச் சைவத்தையே வலியுறுத்தி சாதாரண கிராம வழிபாடுகளையும் சடங்குகளையும் முறையற்றவை, மூடநம்பிக்கை வாய்ந்தவையென முத்திரைகுத்தி அப்புறப்படுத்தியது. கண்ணகி கோயில்களும் சடங்குகளும் இராஜஇராஜேஸ்வரி கோயில்களாக மாற்றப்பட்டு ஆகம மயப்படுத்தப்பட்டவற்றை இந்தப் பின்னணியில் புரிந்து கொள்ளவேண்டும். இதற்குள் உள்வராத மற்றவைகளை தீண்டத்தகாததாக விழிம்புநிலைப்படுத்தி ஒதுக்கி யாழ்ப்பாண சமூக அதிகாரப்படிநிலையினை மேலும் இறுக்கமாக்கிப் பேணியது.

இதன் இன்னுமொரு விளைவு என்னவெனில் யாழ்ப்பாணத்துக்குள்ளேயும் வெளியேயும் பல பிரதேச சமூக வேறுபாடுகளைக் கூர்மைப்படுத்தியதாகும். அதாவது மொழிவழி தமிழர் ஒற்றுமையினையன்றி மதவழியினூடு அது பேணிய சற்சூத்திரக் கொள்கையின் காரணமாக பிரதேச வேறுபாடுகள் முக்கியமானதாக விளங்கியது/விளங்குகின்றது. உதாரணத்துக்கு தீவார், வடமராட்சியார், தென்மராட்சியார், வலிகாமத்தார், வன்னி, மட்டக்களப்பார் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

இது தனியே ஒரு பிரதேச அடையாளம் சார்ந்ததோ அந்தப் பிரதேச பண்பாடு சார்ந்ததான ஒரு நோக்குநிலையோ அல்ல. இதற்குள் அடிப்படையாக சாதிரீதியான அடையாளம் ஊடுபாய்ந்திருப்பதை கவனிக்கத் தவறக் கூடாது. சமூக அதிகாரப் படிநிலை உறவின் பேணுகையில் சமூகத்தின் உளவியல் இயங்கு தளமும் அதன் திருப்தியும் முக்கியமானதாகும். அதாவது தனக்குக் கீழ் உள்ளவனை விட தான் சிறந்தவன் என்பதும் தான் அதிகாரம் செலுத்துவதற்கும் தனக்கு கௌரவமும் மதிப்பும் வழங்குவதற்கும் தனக்குக்கீழ் குறிப்பிட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதும் ஒவ்வொருத்தருக்கும் அவர்களுடைய அடிமனம்வரை ஊடுபாய்ந்து நிற்கும் ஒரு உளவியல் யதார்த்தமாகும். இந்த உளவியல் நிலை காரணமாக ஒரே சாதியாக இருந்த போதிலும் மற்றைய பிரதேசத்து சாதிகளிலும் பார்க்க தான் உயர்ந்தவன் என நினைப்பதும் உருவாகின்றது. உதாரணத்துக்கு ‘‘தீவுப்பகுதியில் பஞ்சமர் தம்மை வடமராட்சிப் பகுதிப் பஞ்சமரிலும் பார்க்க அந்தஸ்து நிலை கூடியோராக நோக்குவது வழமை’’ என்பார் கா.சிவத்தம்பி. இது போன்றே இன்னொரு சுவாரஸ்யமும் இதற்குள் உண்டு. அதாவது மொத்த யாழ்ப்பாணமுமே மற்றப் பிரதேசங்களை விட அந்தஸ்து கூடியது என்ற நோக்கு நிலை. இந்த நோக்கு

நிலைக்கு அச்சுறுத்தல் வருகின்றபோது அல்லது அதனை கேள்விக்குட்படுத்துகின்ற போது அது தன்னைக் தற்காத்துக் கொள்ள எடுத்துக் கொள்ளும் ஒரு ஆயுதமே பிரதேச வாத அடையாளமாகும்.

எனவே ‘‘சைவமும் தமிழும்’’ என்ற கருத்துநிலை தமிழர்களை மொழியால் ஒன்றிணைக்காமல் மதக் கோட்பாட்டினடியாக சாதி அடையாளங்களாகவும் அந்தச் சாதிக்கூடான பிரதேச அடையாளங்களாகவும் வேறுபடுத்தி சமூக அதிகாரப்படிநிலையை பேணுவதற்கான ஒன்றாகவே இருந்திருக்கிறது/இருந்துவருகிறது.

அன்று இந்தக் கருத்து நிலையின் அரசியல் பிரதிநிதியாக சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் காணப்பட்டார். இதற்கு உதாரணமாக பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிட முடியும்.

1. ‘‘1920 – 1930களில் பாடசாலைகளிற் சாதியமைப்பை ஊறு செய்யும் வகையில், பள்ளிப் பிள்ளைகளுக்குச் சமாசனம், சமபோசனம் வழங்கப்படுவதற்கு எதிரான இயக்கம் இருந்தது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் காலாசாலையில் சேர்க்கப்பட்ட வெள்ளாளரல்லாத மாணவர்களுடன், வெள்ளாள மாணவர்களுக்கு சமபோசனம் வழங்குவதை எதிர்த்து 1930 இல் சேர்.பொன்.இராமநாதன் தேசாதிபதியைச் சந்தித்தார்.

2. தேசவழமைப்படி உயர்ந்த சாதியினரின் இறுதிக் கிரியை முறைகளுக்குப் பாத்தியதையற்ற சாதியைச் சேர்ந்த ஒருவர், தனது மனைவியின் இறுதி ஊர்வலத்தைப் பறை முதலியவற்றுடன் கொண்டு சென்று, சடலத்தை எரிக்க முற்பட்ட பொழுது, அதனை எதிர்த்தவர்கள் ‘‘சட்ட விரோதமற்ற’’ வகையில் எதிர்த்தனர் என அவர்களுக்கெதிராகப் போடப் பெற்ற வழக்கில் அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். வழக்கு மேன்முறையீட்டுக்குச் சென்ற பொழுது இராமநாதன் எதிரிகள் தேசவழமைப்படி அந்த மரண ஊர்வலத்தை நிறுத்த உரிமையுடையவர்கள் என்று வாதிட்டார்.

3. சர்வஜன வாக்குரிமை வழங்கப்படக்கூடாது என இராமநாதன் கருதினார். இராமநாதனும் மற்றும் பல பழமைபேண் வாதிகளும் (செல்லத்துரை, சிறிபத்மநாதன், ஆர்.தம்பிமுத்து இதற்கு புறநடையானவர்கள்) வெள்ளாளரல்லாத சாதியினருக்கும் பெண்களுக்கும் வாக்கரிமை அளிப்பது கும்பலாட்சி (Mob rule) க்கு இடம் கொடுக்கும் ஒரு பாரிய பிழையென்று நம்பினர், வாதிட்டனர், சிறப்பாக இராமநாதனோ, அவ்வாறு வாக்குரிமை வழங்குவது இந்து வாழ்க்கை முறைக்குப் பழிகேடு விளைவிப்பது என்று கருதினார்.’’ (சிவத்தம்பி.கா,(2000) பக். )

எனவே இந்தச் ‘‘சைவமும் தமிழும்’’ என்ற கருத்துநிலையை முன்னெடுத்தவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று ஒட்டுமொத்தத் தமிழர்களின் அபிவிருத்தி சமூக முன்னேற்றம் என்றில்லாது மிகக்குறுகிய ஒரு சமூகக்குழுவை முன்னிலைப்படுத்தி இயங்கியுள்ளனர்.

இந்தச் ‘‘சைவமும் தமிழும்’’ என்ற கருத்து நிலைக்கு பேராசிரியர் சிவத்தம்பி கூறியது போன்றே ‘‘சிங்களப் பௌத்தம்’’ என்பதும் இலங்கையின் பிரதான மதமரபினையும் சிங்கள மொழிப் பண்பாட்டையும் இணைந்து நோக்குகின்ற ஒரு போக்காகும். இதன்படிக்குச் சிங்களமும் பௌத்தமும் ஒன்றிலிருந்து மற்றது நீக்கப்பட முடியாததாய், ஒன்று மற்றதில்லாமல் பூரணத்துவம் அடைய முடியாததாய் இருக்கும். ஒரு மதப் பண்பாட்டு இணைவு நிலையாகும். இந்த நோக்கு சிங்கள இனத்தினதும், பௌத்தத்தினதும் முழுவரலாற்றையும் உள்ளடக்கியதாகும் எனக் கூறலாம்.

## அடையாள அரசியலின் சிங்களக் கருத்து நிலைத் தளம்

எவ்வாறு ஆறுமுகநாவலர் சைவமும் தமிழும் என்பதை முன்னிலைப்படுத்தி இயங்கினாரோ அது போல் தென்னிலங்கையில் சிங்களப் பௌத்தக் கருத்துநிலையின் அடிப்படையில் மிகெத்துவத்த குணானந்த தேரர் கிறிஸ்தவ எதிர்பியக்கத்தில் இயங்கினார். இருவரும் காலனித்துவ ஆட்சியை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவத்தினையே எதிர்த்தனர். ஆறுமுகநாவலர் கிறிஸ்தவத்தினால் தமிழ்ச் சமூக அமைப்பு சிதையக்கூடாது என்பதற்காக கிறிஸ்தவத்தை எதிர்க்க குணானந்த தேரர் கிறிஸ்தவர்களே இலங்கையின் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் முன்னிலை பெறுவதனால் எதிர்த்தார். இங்கு பெரும்பாலான சிங்கள மக்களின் அரசியல் சமூக பொருளாதார முன்னேற்றம் என்ற ஒரு தோற்றப்பாடு அடிப்படையாக இருப்பதைக்காணலாம். இதனால் பெருமக்கள் திரளுகை சிங்களப் பௌத்தக் கருத்தியலுக்குச் சாத்தியமாயிற்று.

சிங்களப் பௌத்தக் கருத்தியலின் முதலாவது வன்முறை கொட்டாஞ்சேனையில் 1883ஆம் ஆண்டு பௌத்தருக்கும் கத்தோலிக்கருக்குமிடையில் ஏற்பட்டது. ‘‘புனித லூசியா தேவாலயத்துக்கு அருகே உள்ள பௌத்த கோயிலில் இருந்த தீவிரப் போக்குடைய மீகத்துவத்த குணானந்த என்ற பிக்கு ஈஸ்டர் பண்டிகை நாட்களில் நடைபெறக்கூடியதாகத் தன் கோயிலிலும் சில சடங்குகளை ஒழுங்கு செய்தார். இது தமக்கு எதிரான செயல் எனக் கிறிஸ்த்தவர்கள் நினைத்தனர். பெரும் கலவரம் ஒன்று நடந்தது. ஒருவர் இறந்தார் 12 போலிஸ்காரர்கள் உட்பட 30 பேர் காயமுற்றனர்’’ (ஜயவர்த்தன குமாரி, 2011:12 ) இவருக்குப் பின் இக்கருத்தியலை தீவிரமாக முன்னெடுத்தச் சென்றவர் அநாகரிக தர்மபால ஆவார்.

‘‘சிங்களப் பௌத்தம்’’ என்பதை முதன் முதலில் பயன்படுத்தியவர் இவரே ஆவார். 1906ஆம் ஆண்டில் ‘சிம்ஹல பௌத்தய’ (Simhala Bauddhaya) என்றொரு பத்திரிகையை ஆரம்பித்தார். இதுவே சிங்களவர்களின் முதன்முதலான அடையாள அரசியல் நடவடிக்கையாகும். இது கிறிஸ்த்தவ மதத்துக்கு மாறாமல் எவ்வித சலுகைகளும் பெறாமல் வாழும் சிங்கள மக்களுக்கு சரியான தலைமைத்துவத்தை வழங்கி அவர்களின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் உழைப்பதற்கான மக்கள் திரளினை ஒன்று திரட்டுவதற்கான ஒன்றாக இருந்தது.

அநாகரிக தர்மபால ‘‘சிங்களவர்களே! விழிப்புறுங்கள்’’ என்ற தனது சுலோகத்திற்கு அமைய துட்டகைமுனுவின் வீரச் செயல்களை வர்ணித்தே தன்னைப் பின்பற்றியோருக்கு சிங்கள உணர்வை ஊட்டினார். ‘‘எமது நாட்டையும் இலக்கியத்தையும் இனத்தையும் மகிமையுள்ள மதத்தையும் பாதுகாக்கும் தேசபக்தர்களாவதற்கு தேசப்பற்றை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் இலக்கியங்களை நாம் படிக்க வேண்டும் எமது சமயத்தின் ஊற்றுக்களில் இருந்து எம் மூதாதையர் எழுபது தலைமுறைகளாகப் பெற்றுக் கொண்டமையாலேயே வீரமும்

தேசபக்தியும் நீதியுமுள்ள அரசனுமாகிய துட்டகைமுனு தாயினதும் தேசபக்தியுள்ள ஆதரவாளர்களினதும் உதவியோடும் பிக்குகள் சங்கத்தின் ஆசீர்வாதத்துடனும் தேசத்தைப் புனருத்தாரணம் செய்த காலம் முதல் இற்றைவரை எதிரிகளுக்கு எதிராகப் போர் புரிவதற்கு தைரியம் பெற்றனர்.'' என்று இலங்கையின் இளைஞருக்கு விடுத்த செய்தியில் கூறுகின்றார். அதே செய்தியில் “ அரசன் துட்டகைமுனுவை ஆத்மீகரீதியாக நீங்கள் தரிசித்து பௌத்தத்தையும் தேசிய வாதத்தையும் இருளில் இருந்து மீட்ட அம்மகா மன்னனின் சிந்தனைகளோடு உங்களை அடையாளம் காணுங்கள்'' என்று இளைஞர்களை அவர் பணித்தார்''( சிறிவீர.டபிள்யு.ஐ. (1985), துட்டகைமுனு – எல்லாளன் வரலாற்று நிகழ்வு: ஒரு மறுமதிப்பீடு, பக் 135)

இது போன்றே பல சிங்கள இலக்கியகாரர்கள் தங்களுடைய இலக்கியங்களுக்கான கருப்பொருளாக எல்லாளன் துட்டகைமுனு யுத்தத்தை எடுத்துக் கொண்டு இலக்கியங்களைப் படைத்தனர். அவ்விலக்கியங்கள் எல்லாம் சிங்கள பௌத்தக் கருத்தியலை தாராளமாக முன்வைத்தன. அதுமட்டுமன்றி மாணவர்களின் மொழிப்பயிற்சிக்கும் பௌத்த வளர்ச்சிக்கும் வரலாற்று அறிவுக்கும் துட்டகைமுனு, எல்லாளன் யுத்தமே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. இவற்றிலெல்லாம் எல்லாளன் சிங்களவர்களுக்கும் பௌத்தத்துக்கும் எதிரான ஒருவனாகவே சித்தரிக்கப்பட்டான். இச்சித்தரிப்புக்களில் எல்லாளன் தனியொரு அரசனாக அன்றி அவன் தமிழர்களின் பிரதிநிதியாகவே பார்க்கப்பட்டு தமிழர்களுக்கு எதிரான சிங்கள உணர்வு ஊட்டி வளர்க்கப்பட்டது.

இந்த சிங்கள பௌத்தக் கருத்தியலுக்குள் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் தமிழ் எதிர்ப்புணர்வை அது இனம், மதம் என்பவற்றை இணைத்துக் கூறுவதாகும். இதனால் சாதி, பிரதேச வேறுபாடுகளைத் தாண்டி சிங்களவர்களை மொழிரீதியாகவும் மதரீதியாகவும் ஒன்றிணைத்து அவர்களுக்கு எதிரானவர்களாக தமிழர்களை முன்னிறுத்துவது இலகுவானதாக இருந்தது.

இங்கு எல்லாளன் அல்லது தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிரான ஒரு குறியீட்டுப் படிமமாகப் பார்க்கப்படுகின்றனர். சிங்களப் பௌத்த அதிகாரத்திலும் அதன் அபிவிருத்தியிலும் யார் குறுக்கிட்டாலும் அவர்கள் அகற்றப்படவேண்டியவர்கள் என்பதையே இது காட்டுகின்றது.

இந்தக் கருத்தியலின் இரண்டாவது வன்முறையே 1915ஆம் ஆண்டு கண்டியில் நடந்த முஸ்லீம்களுககு எதிரான இனக்கலவரமாகும். இது அடிப்படையில் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு கலவரமாகும். ஏனெனில் “1880இல் புறக்கோட்டை வர்த்தகத்தில் 86 செட்டியா கம்பனிகளும் 64 முஸ்லிம் கம்பனிகளும் முதன்மை பெற்றன. எச்.டொன்கரோலிஸ் (தளபாடங்கள்) என்.டொன்கரோலிஸ்(தளபாடங்கள்), என்.எஸ், பெர்னான்டோ(உபகரணங்கள்) போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய சிங்கள வியாபாரிகளே காணப்பட்டனர்.

20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ‘அந்நிய வர்த்தகர்கள்’ ‘மண்ணின் மைந்தர்களுக்கு’ எதிரிகள் என்ற கருத்துச் சிங்களப் பத்திரிகை உலகில் பிரபலமாக்கப்பட்டது. இக்கருத்தின் முக்கிய பிரசாரர்களில் ஒருவர் அனாகரிக தர்மபாலா.

இக்காலத்தில் தர்மபாலாவின் கண்டனங்கள் குறிப்பாக முஸ்லிம் வியாபாரிகளுக்கு எதிராகவே அமைந்தன. 1915இல் அவர் எழுதினார் “ அந்நியரான முகமதியர் ஷைலொக்கிய வழிமுறைகளால் யூதர்கள் போன்று செல்வந்தராய் மாறினர். 2358

வருடங்களாக அந்நிய முற்றுகைகளில் இருந்து நாட்டைக் காப்பதற்காக இரத்தத்தை ஆறு போல் பெருக்கிய மூதாதையரைக் கொண்ட மண்ணின் மைந்தரான சிங்களவர் பிரித்தானியரின் கண்களில் நாடோடிகளாய்த் தெரிகின்றனர். தென்னிந்திய முகமதியர் இலங்கைக்கு வந்து வியாபாரத்தில் எத்தகைய அனுபவமுமற்ற, உதாசீனம் செய்யப்பட்ட கிராமவாசியைக் காண்கிறான். இதன் விளைவு முகமதியன் முன்னேறுகிறான் 'மண்ணின் மைந்தன்' பின்தள்ளப்படுகிறான்.'' (ஜயவர்த்தன குமாரி, 2011:18 )

இக்காலகட்டத்தில் இலங்கையில் மாக்ஸ்சிசக் கொள்கை அறிமுகமாகி பல தொழிற்சங்கப் போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்ட போதும் இலங்கை மக்கள் அனைவரையும் வர்க்க ரீதியாக இணைக்க முடியவில்லை.

பல நூற்றாண்டுகளாக இலங்கைச் சமூகமானது சாதிரீதியானதாகவும் மதரீதியானதாகவும் இனரீதியானதாகவும் பிரதேச ரீதியானதாகவும் உருவாக்கம் பெற்று வளர்ச்சியடைந்து இயங்கி வந்த சூழலில் காலனித்துவ ஆட்சி ஒரு திணிப்பாக இலங்கையர்களுக்கு ஏற்படுகின்றது. இதன் மூலம் இங்கு அறிமுகமான முதலாளித்துவம் மேற்கு ஐரோப்பிய பெரு நகர மையங்களில் பொருளுற்பத்தியுடன் கூடிய வளர்ச்சி பெற்ற முதலாளித்துவம் அல்ல. இது வணிக முதலாளித்துவமாகும். இந்த வணிகமும் அதனுடன் இணைந்த நிறுவனங்களும் பெருமளவுக்கு கொழும்பையே மையமாகக் கொண்டிருந்தன. இதன் காரணமாக ஏற்கனவே குறிப்பிட்ட தொழிலாளர் போராட்டங்கள் எல்லாம் கொழும்பையே மையங்கொண்டிருந்தன. கிராமங்களிலுள்ள விவசாயத் தொழிலாளர்கள் பற்றியோ அவர்களுடைய நலன்கள் பற்றியோ எந்தப் போராட்டமும் இக்காலப் பகுதியில் இடம்பெற்றதாக தகவல் இல்லை. இதனால் வர்க்கம், வர்க்க நலன் தொடர்பான பிரஞ்ஞை பெருமளவான இலங்கையர்களுக்கு இருக்கவில்லை என்பதோடு அவர்களுக்கு இருந்ததெல்லாம் சிங்கள பௌத்தம், சைவமும் தமிழும் என்ற கருத்துநிலைகள் கட்டமைத்த அடையாளங்களேயாகும்.

இந்த நிலை சாதாரண மக்களுக்குரிய ஒன்றாக மட்டும் இருக்கவில்லை. தொழிற்சங்கத் தலைவராக இருந்த ஏ.ஈ.குணசிங்கா அவர்களும் இதே நிலையில்தான் காணப்பட்டார். அவர் மாக்ஸ்சிசக் கருத்துக்களின் பால் வளர்க்கப்பட்டவரல்ல. அவர்களுடனான உறவுகளையும் பெரிதளவுக்கு விரும்பி வளர்த்தவராகவும் தெரியவில்லை. அவர் அநாகரிக தர்மபாலாவின் சிங்களப் பௌத்த மறுமலர்ச்சி, தேசியவாதம் போன்ற உணர்வுகளாலும் கருத்தியலாலும் பாதிக்கப்பட்டவராகவும் இருந்தார். இதன் காரணத்தினால் பொருளாதார நெருக்கடியினை இன நெருக்கடியாக எடுத்துக்காட்டினார். வேலையில்லாக் காரணத்துக்கும் வறுமைக்கும் இலங்கையில் தொழில்புரியும் மலையாளிகளே காரணம் என்று அவர்களுக்கு எதிரான பிரச்சாரத்தினை தீவிரப்படுத்தினார். ஆரம்பத்தில் தொழிலாளர் ஒற்றுமை பற்றிப் பேசியவராக இருந்தாலும் நெருக்கடியான காலகட்டத்தில் இந்தியத் தொழிலாளர்களை அந்நியப்படுத்தி அவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றுவதே அவருடைய நோக்கமாக இருந்தது. இதனால் நடேச ஐயர் குணசிங்காவை ஒரு இந்திய எதிர்ப்பாளர் என்றும் சிங்கள பௌத்த இனவாதி என்றும் வெளிப்படையாகக் குற்றம் சாட்டினார். இதனால்

கோபமுற்ற குணசிங்கா நடேச ஐயரை தொழிற்சங்கத்தை விட்டு வெளியேற்றியது மட்டுமல்லாது எல்லா இந்தியத் தொழிலாளர்களையும் தனது சங்கத்தில் இருந்து வெளியேற்றினார். இதனைத் தொடர்ந்து முதன் முதலாக தனது தொழில்சங்கத்தினூடாக தொழிலாளர் வர்க்கத்தின் மற்றொரு பகுதித் தொழிலாளர்களுக்கெதிரான மலையாளி எதிர்ப்புப் போராட்டத்தினை தலைமைதாங்கி நடத்தினார்.

இவருடைய தொழிற்சங்கத்தினுடைய சிங்கள மொழிப் பத்திரிகையான 'வீரயா' எனும் பத்திரிகை மலையாள எதிர்ப்புப் பிரச்சாரத்தில் முன்னணியில் நின்றது.

'மலையாளிகளை நாம் ஒதுக்கலாமா?' என்ற ஆசிரியத் தலையங்கத்தில் 'வீரயா' (1 ஏப்ரல் 1936) ஏடு மலையாளிகளை ஒதுக்கும் இயக்கத்துக்கு ஆதரவு நல்கும் படியும் சிங்களவரை ஒன்றுகூடும்படியும் வேண்டுகோள் விடுத்தது. மறுவாரம் 'எவ்வாறு நாம் மலையாளிகளை ஒதுக்கலாம்' என்ற ஆசிரியத் தலையங்கத்தில் 'வீரயா' எல்லாத் திசைகளிலுமிருந்து மலையாளிகளை ஒதுக்கும் குரல் கேட்கிறது என எழுதியது. அது தொடர்ந்து உங்கள் தொழிற்சாலை, தோட்டம், கடை, மாளிகை, காணி என்பவற்றில் பணியாற்றும் மலையாளிகளை வேலை நீக்கம் செய்ய வேண்டும் என்று நீங்கள் கேட்க வேண்டும். அவர்களுடைய இடத்தில் சிங்களவர் நியமிக்கப்பட வேண்டும் என்று கேளுங்கள். இது வன்முறையின்றி அமைதியாக நிகழும் எனக் கூறப்பட்டது (ஜயவர்த்தன குமாரி,1985:42)

மலையாளிகள் தொடர்பான பிரச்சினைகளை ஆராய ஒழுங்கு பண்ணப்பட்ட ஒரு கூட்டத்தில் ஏ.ஈ.குணசிங்கா உள்ளூர்க்காரர்களின் வேலையினை மலையாளிகள் எடுத்துக்கொள்வதால் வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர்களை ஆட்குறைப்புச் செய்யாதது பற்றியும் நாடு கடத்தாதது பற்றியும் அரசாங்கத்தை வன்மையாகக் கண்டித்தார்.

1939இல் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டக் கூட்டமொன்றில் ''சிங்களவராகிய நாம் அனைவரும் ஒரே கொடியின் கீழ் அணிதிரளவேண்டும்'' என்று பிரகடனம் செய்தார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அப்போதைய விவசாயத்துறை அமைச்சராக இருந்த டி.எஸ். சேனநாயக்கா சிங்கள மக்களை தூண்டிவிடும் வகையில் பேசினார்.

''(சிங்களவராகிய) எம் உடலில் ஓடுவது ஒரே குருதி. நாம் ஒரே இனத்தவர். நாம் தனிச் சிறப்புள்ள மக்கள் 5500 ஆண்டுகளுக்குத் தன் மதம் நிலைக்குமென்று புத்தர் கூறினார். புத்தமதத்தின் பாதுகாவலர்கள் என்ற முறையில் நாமும் அதே அளவு காலம் நிலைத்து வாழ்வோம். (மேற்கோள் குமாரி ஜயவர்த்தன, (சிலோன் டெயிலி நியூஸ், 17, ஏப்ரல் 1939)

இது போன்றே சிங்கள இனம் 'ஆரிய இனம்' என்ற கற்பிதத்தை 'வீரயா' பத்திரிகை மிக இறுக்கமாகக் கடைப்பிடித்து இனத்தூய்மையை வலியுறுத்தியது. 'கலப்புத் திருமணங்களும் தேசிய அபிவிருத்தியும்' என்ற பி.சிறிசேனா என்பவரினால் எழுதி வெளியிடப்பட்ட கடிதத்தில்

“ஜேர்மனியின் தலைவரான ஹிட்லர் ஆரியக் குருதி ஓடாத எவனிடமும் தலைமைப் பண்பைக் காணமுடியாது என்று கூறினார். எனவே அவர் தமது நாட்டில் ஆரியரும் ஆரியர் அல்லாதாரும் மணம்புரிவதைத் தடுத்துள்ளார். ஆரியர் அல்லாதார் வீடுகளில் இளம் ஆரிய ஜெர்மன் பெண்களை வேலைக்கு அமர்த்துவது சட்டவிரோதம் ஆகும் என ஹிட்லர் பிரகடனம் செய்தார். கலிபோர்னியா, பேர்ச்சியா போன்ற நாடுகளில் கூட அந்நியரை மணம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் நோக்கமெல்லாம் தூய ஆரிய இனத்தை உருவாக்குவதேயாகும். ஆரியருக்கும் ஆரியர் அல்லாதவருக்கும் பிறந்த பிள்ளைகள் எவ்வித உயர் பண்புகளுமின்றி அழிந்துபடுவர் என அவர்கள் நம்புகிறார்கள் (மேற்கோள் குமாரி ஜயவர்த்தன, (வீரயா, 17 ஏப்ரல், 1936)

இது போல சிங்கள பெண்களும் வேறு இனத்தவரை மணம்முடியாது சிங்களவர்களையே மணம் முடித்து தங்களுடைய இனத்தூய்மையைப் பேண வேண்டும் என்று சொல்லப்பட்டது. தொழிற்சங்கங்களினூடாக தொழிலாளர்களை ஒற்றுமைப்படுத்தி வர்க்க உணர்வையும் வர்க்கப் போராட்டத்தையும் வளர்க்க வேண்டிய தொழிற்சங்கத் தலைவர்களே இனவாதத்தை வளர்த்து தமது சக தொழிலாளர்களை விரோதிகளாக்குகின்ற நடவடிக்கையிலும் ஈடுபட்டமை இலங்கை அரசியலின் சாபக்கேடாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல் ஏ.ஈ.குணசிங்கா போன்ற தொழிற்சங்கத் தலைவர்கள் உழைக்கும் மக்களின் வர்க்க நலனில் அக்கறை கொண்டவர்கள் அல்ல. காலனித்துவ அரசு வழங்கிய பொருளாதார நலன்களையும் சமூக அந்தஸ்த்தினையும் பெறுவதற்கான ஒரு வழியாக தொழிற்சங்கங்களைப் பயன்படுத்தினர். குணசிங்கா கொழும்பு மத்திய தொகுதியிலிருந்து சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவராகவும் இருந்தார். இந்த சட்டசபை உறுப்புரிமையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் வாக்குகள் அவருக்குத் தேவையாக இருந்தன. இவற்றை பெறுவதற்கான சுலபமான வழி ஏற்கனவே சமூகத்தில் உள்ளுறைந்து கிடக்கும் இனம், மதம், போன்ற அடையாளங்களை மக்கள் முன் வைப்பதேயாகும்.

இந்த நிலையினை பேராசிரியர் ந. முத்துமோகன் பின்வருமாறு வினக்குகின்றார்,

“காலனிய ஆட்சிக்காலத்தில் வர்க்கம்/குழுமம் ஆகியவற்றுக்கிடையிலான இயங்கியலை தோராயமாக கீழ்க்கண்டவாறு வரையறுக்கலாம். ஐரோப்பியம், காலனியம், நவீனம் ஆகியவற்றுக்கு எதிராக கூட்டுத் தற்காப்பு உணர்வு மரபுரீதியான குழுமங்களை அடையாள இயக்கங்களாக உருப்படுத்துகிறது. சாதி, மத, வட்டார, மொழி வழி அடையாளங்கள் மீட்டுருவாக்கம் செய்யப்படுகின்றன. காலங்காலமாக குழுமம் வழங்கிய பாதுகாப்பு உளவியல் மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது. மற்றொரு புறம், ஐரோப்பியம், காலனியம், நவீனம், ஆகியவை வழங்கும் புதிய அரசியல், பொருளாதார, கலாசார வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொண்டு உயர்வு பெறுதல் என்ற வர்க்க உணர்வும் தொழில்படுகிறது. காலனிய அரசு அதன் நவீன அரசியல் வடிவில் எண்ணிக்கைக்கு வழங்கும் முக்கியத்துவம் உணர்ந்து கொள்ளப்படுகிறது. எனவே பிற சமூகப் பகுதியினரோடு எண்ணிக்கைப் போட்டியில்

ஈடுபடும் அவசியம் தோன்றுகிறது. அடையாள நலனும் வர்க்க நலனும் இரண்டறக் கலந்திருப்பதை இங்கு காணுகிறோம்''

இலங்கையின் இடதுசாரிகளும் இந்த அடையாளங்களை எவ்வாறு உழைக்கும் மக்களின் நலனுக்கு கையாளலாம் என்பதில் போதிய தத்துவார்த்த தளத்தினைக் கொண்டவர்களாக இருந்ததாகத் தெரியவில்லை. இந்தத் தத்துவார்த்த வரட்சி இன்றைவரை எமது அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாக இருக்கின்றது.

அப்போதைய மாக்ஸ்சிஸ்ட் தலைவர்கள் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கல்வி கற்று வந்தவர்களாக இருந்தனர். இவர்கள் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் சென்றது மாக்ஸ்சிசம் கற்று இலங்கையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி சோஷலிச அரசொன்றை அமைப்பதற்கல்ல. இலங்கையில் மிக உயர்வர்க்கமாக இருந்த இவர்கள் தங்களுடைய வாழ்க்கைச் சுகபோகங்களை அனுபவிப்பதற்கே அங்கே கல்வி கற்கச் சென்றனர். அங்கு அவர்கள் எதிர்கொண்ட நிறவாதத்தினை எதிர்ப்பதற்கான கருவியாக மாக்ஸ்சிசம் காணப்பட்டதனால் மாக்ஸ்சிசவாதிகளாயினர். பின்னர் நாடு திரும்பியதும் அதே மாக்ஸ்சிச முத்திரையுடன் இருந்தார்களே தவிர அவர்களிடத்தில் குணாம்சரீதியான வேறுபாடு ஏற்படவில்லை. உயர் வர்க்க குணாம்சங்களுடனான மாக்ஸ்சிச வாதிகளாக அரசியலில் இவர்கள் ஈடுபட்டனர்.

இலங்கை மாக்ஸ்சிசவாதிகளின் இந்த வர்க்க இயல்புகாரணமாகத்தான் அவர்களால் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராக தொழிற்சங்கப் போராட்டங்களைத் தவிர்த்து எதுவும் செய்யாததுடன் சிங்கள பௌத்த கருத்தியலுக்கு எதிராகவும் எதுவுமே செய்யமுடியவில்லை.

'பௌத்த சிங்களக்' கருத்துநிலை இலங்கைத் தேசியவாதமாகவும் 'சைவமும் தமிழும்' கருத்துநிலை தமிழ்த் தேசியவாதமாகவும் உருமாற்றம் அடைந்தன. இவர்கள் அனைவரும் இணைந்து காலனித்துவ ஆட்சிக்கெதிராக போராடி இலங்கையர்களுக்கு சுயாட்சி பெற்றுக்கொடுப்பதற்காக 1919ஆம் ஆண்டில் ''இலங்கைத் தேசிய காங்கிரஸ்'' எனும் அமைப்பினை உருவாக்கினர். இதன் முதலாவது தலைவராக சேர்.பொன்.அருணாசலம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது இந்திய தேசிய காங்கிரசின் வழியில் எல்லா மக்களையும் ஒன்றிணைத்து காலனித்துவத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்த போதிலும் அதற்குள் காணப்பட்ட 'சிங்கள பௌத்தம்' பிரதேச ரீதியான மற்றும் தமிழ் அடையாளங்கள் முன்னுரிமை பெற்றதினால் எல்லா மக்களையும் ஒன்றிணைத்து காலனித்துவத்துக்கு எதிராக போராடுவது இவர்களாலும் சாத்தியம் இல்லாமல் போய்விட்டது.

1921ம் ஆண்டு சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை முன்வைப்பதற்கு 'தமிழர்மகாசனசபை' எனும் அமைப்பினை சேர்.பொன்.அருணாசலம் உருவாக்கினார். இதே ஆண்டு சிறுபான்மைச் சமூகங்களின் ஒற்றுமை தொடர்பான மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. இதில் மேல் மாகாணத்தில் தமிழர்களுக்கான தனித் தேர்தல் தொகுதி வழங்கப்படல் வேண்டும் என்ற தமது கோரிக்கையில் தமிழ் தலைவர்கள் உறுதியாக இருக்க சிங்களத் தலைவர்கள் அதனை ஏற்கமறுத்து நிராகரித்தனர். இதனால்

பெரும்பான்மையினத்தவர்களுடனான ஒற்றுமை கேள்விக்குறியானது. நியாயமற்ற கோரிக்கையினை முன்வைத்து தேசிய காங்கிரசில் இருந்து விலகி 'தமிழர் மகாசபை' எனும் அமைப்பினை ஒட்டுமொத்த தமிழர்களுடைய அமைப்பாக அடையாளப்படுத்தி நிறுவியமை. தமிழ் அடையாளத்தினை ஒரு குறிப்பிட்டவர்களின் நன்மைக்காக பயன்படுத்தகின்ற முதல் சந்தர்ப்பமாகும்.

அருணாசலம் அவர்களின் இச்செயற்பாட்டினூடாக தமிழ்த் தேசியவாதம் ஆரம்பித்ததான கருத்தும் உண்டு. தமிழ்த் தேசிய வாதத்தின் மிகப் பெரிய பலவீனமே அது எதற்காக யாருடைய தேவைக்காக தோற்றம் பெற்றது என்பதுதான். ஒரு தேசிய இனம் இன்னொரு தேசிய இனத்தின் நலன்களையும் உரிமைகளையும் சுரண்டி வாழாது தனக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய உரிமைகளையும் நலன்களையும் பெற்று வாழ முயற்சிக்க வேண்டும். அந்த நியாயத்தக்கான போராட்டமே தேசிய வாதப் போராட்டம் ஆகும். ஆனால் இங்கு தமிழ் தேசியவாதம் என்பது சட்டசபையில் முறையற்ற பிரதிநிதித்துவக் கோரிக்கையின் அடிப்படையில் எழுகின்றது. அந்தச் சட்டசபைக்கு தெரிவாகப் போகிறவர்கள் கல்விகற்ற வசதிபடைத்த உயர்வர்க்கமேயாகும். எனவே தமிழ்மக்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகவன்றி குறிப்பிட்ட சில பேர் சட்டநிருபணசபையில் உறுப்பினர் ஆதல் வேண்டும் என்பதற்காக பூசப்பட்ட சாயமே தமிழ் தேசியவாதமாகும். இதனை சேர்.பொன்.அருணாசலம் அவர்களும் அவருக்குப் பின்வந்த தலைவர்களும் மிக கச்சிதமாக முன்னெடுத்தனர்.

சேர்.பொன்.அருணாசலம் அவர்களின் தொடர்ச்சியாக ஜி.ஜி.பொன்னம்பலம் தமிழ் காங்கிரஸ் கட்சியை உருவாக்குகின்றார். டொனமூர் அரசியல் திட்டம் தமிழ்மக்களுக்கு போதுமானதாக இல்லை என எதிர்த்தவர்களில் ஜி.ஜி.பொன்னம்பலம், சேர்.பொன். இராமநாதன், அ.மகாதேவா முதலியவர்கள் முக்கியமானவர்கள்.

ஜி.ஜி.பொன்னம்பலம் சோல்பரி அரசியல் திட்டத்தில் அதிக பிரதிநிதித்துவத்தினைப் பெறுவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் பொருளாதார முன்னேற்றத்தினையும் அடையலாம் என தமிழ் மக்களை நம்பவைத்து 50:50 எனும் கோரிக்கையினை நடைமுறைச் சாத்தியமான கோரிக்கையாக பிரித்தானிய அரசிடம் முன்வைத்தார்.

இக்கோரிக்கைக்கு மகாதேவா, செல்வநாயகம், நாகநாதன், போன்றவர்கள் பக்கபலமாக இருந்தனர். அத்துடன் மலேய முஸ்லீம் பிரதிநிதியான ரி.பி.ஜாயா, இந்திய தமிழ்ப் பிரதிநிதியான கே.நடேச ஐயர், இவர்களை விட பறங்கிய, ஐரோப்பியப் பிரதிநிதிகளும் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுடைய கோரிக்கைக்கு ஆதரவினை வழங்கினர். ஆயினும் சிறுபான்மையினருக்கான 50 வீத பிரதிநிதித்துவத்தை விகிதாசார அடிப்படையில் முஸ்லீம்களுக்கு வழங்க மறுத்தமையினால் முஸ்லீம் லிக் தனது ஆதரவினை வழங்கவில்லை. மொத்த சனத்தொகையில் 75 வீதமாக இருக்கும் சிங்கள மக்களுக்கு 50 வீதமான பிரதிநிதித்துவத்தை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்த ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்கள் சிறுபான்மையினருக்கான 50 வீதத்தில் மற்ற

சிறுபான்மையினருக்கு விகிதாசார அடிப்படையில் வழங்க மறுத்திருப்பது அவருடைய அரசியல் நேர்மையீனத்திற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாகும்.

1950ஆம் ஆண்டுகள் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் முக்கியத்துவம் மிக்க ஆண்டுகளாகும். 1948இல் தமிழ் காங்கிரசிலிருந்து எஸ்.ஜே.வி.செல்வநாயகம் பிரிந்து சென்று தமிழரசுக் கட்சியை ஆரம்பித்திருந்தாலும். இதே போன்று 1951இல் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை உருவாக்கினார்.

இவ்வாறு இரு இனங்களின் இரு கட்சிகளுக்கிடையே பிளவு ஏற்பட்டதனால் தமிழ் காங்கிரஸ் எதிர் தமிழரசுக் கட்சி என்றும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி என்றும் தங்களுக்கிடையிலான ஒரு போட்டி அரசியல் உருவாக்கப்பட்டது. இந்தப் போட்டி அரசியல் யார் அந்தந்த இன மக்களை வெற்றிகொண்டு தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெறுகிறார்கள் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இதற்கு சிங்களத் தலைவர்களுக்கு உறுதுணையாக இருந்தது ‘சிங்கள பௌத்தம்’, தமிழ் தலைவர்களுக்கு உறுதுணையாக இருந்தது ‘தமிழ் தேசியம்’ ஆகும். இவற்றினூடாக மக்களை அதிகம் உணர்ச்சிவசப்படுத்தக் கூடிய இனம், மதம், நாடு, மொழி, தேசியம் போன்ற அடையாளங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. நான்கு கட்சிகளுமே இவற்றைப் பாதுகாத்துப் பேணுவதாகக் கூறினாலும் யாரை நம்புவது என்பதே பிரச்சினையாக இருந்தது. இந்த நம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதற்காக போட்டிபோட்டுக் கொண்டு இனவாத செயற்திட்டங்களை முன்மொழிந்து மக்களுடைய இனவாத உணர்வைக் கூர்மைப்படுத்தினர்.

**முடிவுரை**

இவ்வாறு சிங்களவர்களுக்கு ‘சிங்களப் பௌத்தம்’ என்பது அரசியலுக்கான மூலதனமாக இருந்தது/இருக்கின்றது. இலங்கையில் நீண்டு கொண்டிருக்கும் இரு இனங்களுக்குமிடையிலான போராட்டங்களுக்கு இந்த மூலதனமே காரணமாகும். சிங்களத் தலைவர்களாக இருந்த/இருக்கின்ற டி.எஸ்.சேனநாயக்கா, எஸ்.டபிள்யூ.பண்டாரநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாசா, டி.பி.விஜயதுங்கா, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைந்திரிபால சிறிசேன, கோதபாய ராஜபச்ச, ரணில் விக்கிரமசிங்க போன்ற அனைத்து தலைவர்களும் ‘சிங்கள பௌத்தம்’ என்பதனை அங்கீகரித்து அதன் பாதுகாவலர்களாக இருந்தனர்/இருக்கின்றனர்.

இதுபோன்றே தமிழர்களுக்கு ‘தமிழ் தேசியம்’ என்பது என்பது அரசியலுக்கான மூலதனமாக இருந்தது/இருக்கின்றது. தமிழ் மிதவாதத் தலைவர்களாக இருந்த/இருக்கின்ற ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்ஜே.வி.செல்வநாயகம், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், இரா.சம்மந்தன். போன்றவர்களும் தீவிரவாதத் தலைவர்களாக இருந்த பிரபாகரன், பத்மநாபா, சிறிசபாரெத்தினம், உமாமகேஸ்வரன், பாலகுமார். போன்றவர்களும் இன்று மிதவாத அரசியலில் இருக்கும் தமிழ்த் தேசியவாதக் கட்சிகள் என பெயர் சுட்டப்பெற்ற கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் ‘தமிழ்த்

தேசியம்' என்பதனை அங்கீகரித்து அதன் பாதுகாவலர்களாக இருந்தனர்/இருக்கின்றனர்.

தமிழ்த் தலைவர்களும் சிங்களத் தலைவர்களும் 1800 களில் கட்டமைக்கப்பட்ட கருத்துநிலைகளை தங்கள் தங்கள் அரசியல் இலாபத்துக்காக பயன்படுத்துவதை விடுத்து மாக்ஸ்சிசம் முன்மொழிகின்ற தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை எனும் கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் அணுகுவார்களாயின் இலங்கை சபீட்சமுள்ள நாடாக உருவாகும் எனலாம்.

**உசாத்துணைநூல்கள்**


1. சிவத்தம்பி.கா.,(2000), யாழ்ப்பாணம் - சமூகம்,பண்பாடு,கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
2. ஜயவர்த்தன குமாரி., (2011) இலங்கையின் இன வர்க்க முரண்பாடு, குமரன் புத்தக இல்லம், கொழும்பு – சென்னை.
3. முத்துமோகன்.ந.,(2011) தமிழ் அடையாள அரசியலின் இயங்கியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
4. இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்,(1985), சமூக விஞ்ஞானிகள் சங்கம், கொழும்பு.